# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

## திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## (25.11.2015 முதல் 29.11.2015)

**அறிக்கை எண் 94-2015** **தேதி: 24.10.2015**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 25°செ முதல் 31°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 21°செ முதல் 25°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 15°செ முதல் 19°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் பல இடங்களில் மிதமான முதல் கன மழை காணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (25.11.2015 முதல் 29.11.2015)**

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 28°செ முதல் 29°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 15°செ முதல் 19°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 79 முதல் 92 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 46 முதல் 62 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 3 கி.மீ முதல் 5 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென் கிழக்கிலிருந்து வடகிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 25.11.15 | 7 | 29 | 20 | 3 | 97 | 64 | 5 | வடகிழக்கு |
| 26.11.15 | 3 | 29 | 18 | 3 | 88 | 58 | 4 | தென்கிழக்கு |
| 27.11.15 | 0 | 29 | 16 | 1 | 75 | 48 | 4 | வடகிழக்கு |
| 28.11.15 | 0 | 29 | 16 | 1 | 89 | 42 | 3 | வடகிழக்கு |
| 29.11.15 | 3 | 29 | 19 | 1 | 89 | 54 | 4 | தென்கிழக்கு |

## வேளாண் அறிவுரை

- ✓ கடந்த வாரங்களில் அதிக அளவு மழை பெறப்பட்டது. வரும் நாட்களிலும் மழை எதிர்பார்க்கப்படுவதால், மா மரங்களில் அதிக அளவில் இலை மற்றும் தழை வரத்து இருக்கும். இதனை கட்டுப்படுத்த ஒவ்வொரு மரத்திற்க்கும் வடிகால் வசதி செய்யவும். மேலும் புதிதாக முளைக்கும் இலைகளை கவாத்து செய்யவும்.
- ✓ தொடர்ந்து மழை பெறப்பட்டதால், ஈரத்தின் காரணமாக புரதசத்து குறைபாடு மற்றும் எதிர்ப்புசத்தி குறைபாடுகளின் காரணமாக பாக்டீரியா மற்றும் வைரஸ் தாக்குதல் கால்நடைகளிடையே தென்படும். அருகிலுள்ள கால்நடை மருத்துவரை அணுகவும்.
- ✓ வரும் நாட்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால் சம்பா நடவு செய்யப்பட்ட நெல் வயல்களுக்கு வடிகால் வசதி செய்யவும். பூக்கும் தருணம் வர உள்ளதால், அடுத்த வாரங்களில் மழை இல்லாத நேரங்களில் தழை சத்தை மேலுரமாக இடலாம்.

## குறுஞ்செய்தி

- ✓ கடந்த வாரங்களில் அதிக அளவு மழை பெறப்பட்டது. வரும் நாட்களிலும் மழை எதிர்பார்க்கப்படுவதால், மா மரங்களில் அதிக அளவில் இலை மற்றும் தழை வரத்து இருக்கும். இதனை கட்டுப்படுத்த ஒவ்வொரு மரத்திற்க்கும் வடிகால் வசதி செய்யவும். மேலும் புதிதாக முளைக்கும் இலைகளை கவாத்து செய்யவும்.


பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்
த.நா.வே.ப.கழகம், கோவை.